இனிமையான குழந்தைகளே! உங்களுக்கு யாரிடத்திலும் பகை இருக்கக் கூடாது. ஏனெனில் நீங்கள் அனைவருக்கும் நன்மை செய்யக் கூடியவர்களாக இருக்கின்றீர்கள். பகைத்துக் கொள்பவர்களை அரைவேக்காடு பிராமணர்கள் என்று கூறலாம்.

கேள்வி: எந்த நினைவானது புத்தியில் சதா இருந்தால் பயமற்றவர்களாக ஆகி விடுவீர்கள்?

பதில்: நாம் சத்திய கண்டத்திற்கு எஜமான், தேவி தேவதைகளாக ஆகிக் கொண்டிருக்கின்றோம் என்ற நினைவு சதா இருக்க வேண்டும். சரீரத்தை யாராவது அடித்தாலும் ஆத்மாவை யாரும் அடிக்க முடியாது. அடி சரீரத்திற்குத் தான் விழுகின்றது. நான் ஆத்மா பாபாவிடத்தில் சென்று கொண்டிருக் கின்றேன், எனக்கு என்ன பயம் இருக்கின்றது! நாம் அமர்ந்திருக்கும் பொழுது கூரை விழுந்து விட்டால் நாம் பாபாவிடத்தில் சென்று விடுவோம். இதில் பயப்படுவதற்கு எந்த விசயமும் இல்லை. இவ்வாறு பயமற்றவர்களாக ஆக வேண்டும்.

பாடல்: மாதா ஓ! மாதா .....................

ஓம் சாந்தி குழந்தைகள் ஜெகதம்பாவின் மகிமையை கேட்டீர்கள். இப்பொழுது மனிதர்கள் பாடிக் கொண்டு மட்டுமே இருக்கின்றனர், மேளா கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இது சங்கமமாக இருக்கின்றது. குழந்தைகள் - தந்தைக்கான மேளாவாகும். தந்தையிருக்கின்றாரெனில் கண்டிப்பாக தாயும் இருக்கின்றார். பாரதத்தில் ஜெகதம்பாவின் வாழ்க்கைச் சரித்திரத்தைப் பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை. ஜெகத்தை (உலகை) படைக்கக் கூடியவர் அதாவது ஜெகதம்பா. ஜெகதம்பாவிற்கான கோயிலும் இருக்கின்றது. இப்பொழுது குழந்தை களாகிய உங்களுக்கு அறிவு கிடைத்திருக்கின்றது. ஞானம் என்ற மூன்றாவது கண் கிடைத்திருக்கின்றது. யாருடைய நினைவுச் சின்னங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றதோ அவர் கண்டிப்பாக சிருஷ்டியின் சங்கமத்தில் வந்திருப் பார் என்பதை இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். இவர் ஜெகதம்பா என்று அழைக்கப்படுகின்றார். ஜெகத்பிதா, பிரஜாபிதாவும் இருக்கின்றார்களல்லவா!

இந்த எல்லையற்ற நாடகத்தின் முதல், இடை, கடை என்ன? மேலும் முக்கிய நடிகர்கள் யார்? என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை. கதாநாயகன், கதாநாயகிகளும் நடிகர்களல்லவா! இருவர் மட்டும் இருக்கமாட்டார்கள். கண்டிப்பாக அவர்களது சேனையும் இருக்கும். ஜெகதம்பாவிற்கும் சேனை கள் இருக்கும். அவர்கள் சக்திகள் என்றும் கூறப்படுகின்றனர். சக்தி சேனைகள் பிரபலமானவர் களாக இருக்கின்றனர். சக்திகள் எங்கிருந்து வந்தனர்? கண்டிப்பாக சர்வசக்திவான் பரம்பிதா பரமாத்மாவிடமிருந்தே சக்தி அடைந்திருப்பார்கள் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான். அவர் சத்தியம், அழிவற்றவர் என்று கூறப்படுகின்றார். நிராகார மானவரை ஏற்றுக் கொள்பவர்கள் அகாலி என்று கூறப்படுகின்றனர். சீக்கியர்கள், குருநானக் கிரந்தத்தை ஏற்றுக் கொள்கின்றனர். குருநானக் தேவ் என்று கூறுகின்றனர். அவர்களது தலைமுறையில் 10

சக்கரவர்த்திகளின் பெயர்களும் வித விதமாக இருக்கும். சிலருக்கு சிங், சிலர் தாஸ், சிலருக்கு சந்தர் என்றும் பெயர் இருக்கும். அனைவரின் பெயரும் வித விதமாக இருக்கும். மேலும் அகாலியாக இருப்பவர்கள் அகால்மூரத்தை ஏற்றுக் கொள்கின்றனர். சத் ஸ்ரீ அகால் என்பது யாருடைய மகிமையாகும்? பரம்பிதா பரமாத்மாவினுடையதாகும். ஆக சத்தியமானவர் ஒரே ஒரு அகால்மூரத் பரம்பிதா பரமாத்மா என்பது நிரூபணம் ஆகின்றது. சத் ஸ்ரீ அகால் என்று நீங்கள் கூற முடியும். நீங்கள் அவரை அறிந்திருக்கின்றீர்கள். அவர்கள் வார்த்தையாக மட்டுமே கூறி விடுகின்றனர். பொருளைப் புரிந்து கொள்வதில்லை. நீங்கள் சத் ஸ்ரீ அகால்-ஐ அறிந்திருக் கின்றீர்கள். நீங்கள் அவரது சரித்திரத்தை அறிந்திருக்கின்றீர்கள். ஞானச்சிந்தனையும் குழந்தைகளாகிய நீங்கள் செய்ய வேண்டும். தந்தை ஞானக் கடலாக இருக்கின்றார். அவர் (ஞான) கலசத்தை தாய்மார்களிடம் கொடுத்திருக்கின்றார். இவர் பெரிய மம்மா மற்றும் பிறகு நீங்கள் அநேக தாய்மார்கள். ஜெகதம்பாவிற்கு அநேக பெண் குழந்தைகள் மற்றும் ஆண் குழந்தைகள் இருக்கின்றனர். இவர் ஜெகதம்பா எனில் பிறகு பிதாவும் கண்டிப்பாக தேவை. ஜெகதம்பா யார்? அவர் யாருடைய குழந்தை? என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். மனிதர்களாகத் தான் இருக்கின்றனர், 8-10 கைகள் உடையவர்களாக கிடையாது. இவ்வளவு கைகளை ஏன் கொடுத்திருக்கின்றனர்? என்பது யாருக்கும் தெரியாது. ஆக உயர்ந்ததிலும் உயர்ந்தவர் சத்திய பரமாத்மா ஆவார். ஞான மழையைப் பொழியக் கூடியவராகிய (ரூப் பசந்த்) பரம்பிதா பரமாத்மாவிற்கு ரூபமும் இருக்கின்றது. மேலும் பசந்த் அதாவது ஞானக் கடலாகவும் இருக்கின்றார் என்று குழந்தைகள் புரிய வைக்கப்படுகின்றார்கள். இவ்வளவு சிறிய நட்சத்திரமாக இருந்து கொண்டு அவர் ஞானக் கடலாகவும் இருக்கின்றார். அதிசயமல்லவா! தந்தை பிந்து ரூபமாக இருக்கின்றார், அவரிடத்தில் முழுமையான பாகம் நிறைந்திருக்கின்றது. பக்தி மார்க்கத்தில் பக்தர்களின் பாவனைகளை (மன ஆசைகளை) நிறைவேற்றுகின்றார். இவையனைத்தும் நாடகத்தில் பதிவாகியிருக்கின்றது. யாரிடத்தில் என்ன பாவனை இருக்கின்றதோ அது நாடகத்தில் முன் கூட்டியே பதிவாகியிருக்கின்றது. உங்களுடைய இந்த படிப்பும் நாடகத்தில் பதிவாகியிருக்கின்றது. அந்த பாகம் திரும்பவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. புரிந்து கொள்ள வேண்டிய விசயமல்லவா! உயர்ந்ததிலும் உயர்ந்த பகவான் அனைத்தையும் புரிய வைக்கின்றார் என்பதை நீங்கள் நல்ல முறையில் புரிய வைக்க முடியும். அவர் நிராகாரமாக, பயமற்றவராக, பகையற்றவராக.......... இருக்கின்றார். அவருக்கு யாரிடத்திலும் பகை கிடையாது. உங்களுக்கும் யாரிடத்திலும் பகை கிடையாது. நீங்கள் அனைவருக்கும் நன்மை செய்யக் கூடியவர்களாக இருக் கின்றீர்கள். ஒருவேளை யாரிடத்திலாவது பகையிருந்தால் அவர்களை அரைவேக்காடு பிராமணன் என்று கூறலாம். பாதி சூத்திரன், பாதி பிராமணன். இந்த விகாரங்கள் முற்றிலும் நீங்கும் பொழுதுதான் உண்மையான பிராமணன் என்று கூறலாம். இப்பொழுது பாதி பாதியாக இருக்கின்றது. கலியுக தமோபிரதான சம்ஸ்காரம் நிறைந்திருக்கின்றது. அதனை நீக்க வேண்டும். இப்பொழுது உங்களை தேவதை என்றோ, சூத்திரன் என்றோ கூற முடியாது. இடைப்பட்ட பிராமணன் என்று கூறலாம். அதுவும் சம்பூர்ணமாக ஆகவில்லை. ஜெகதம்பாவை தேவதை என்று கூறலாகாது. ஜெகதம்பா எப்பொழுது சம்பூர்ண நிலையடைகின்றாரோ அதன் பிறகு தேவதையாக ஆகின்றார். இப்பொழுது பிராமணனாக இருக்கின்றார். பிரம்மாவின் மகள் சரஸ்வதியாக இருக்கின்றார். ஆனால் இதனை யாரும்

அறிந்திருக்கவில்லை. பிரம்மா எப்பொழுது வந்து முகவம்சத்தினரை படைத்தார்? அவர்கள் சிவசக்தி சேனைகள் என்று கூறப்படுகின்றனர். ஆக அவர் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை பரம்பிதா, பரந்தாமத்தில் இருக்கின்றார் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். பிறகு சூட்சும வதனத்தில் இருக்கின்ற பிரம்மா, விஷ்ணு, சங்கர். இல்லற மார்க்கத்தில் இருக்கின்ற காரணத்தினால் அவர்களை யுகல்களாக (தம்பதியர்) காண்பிக்கின்றனர். விஷ்ணுவை முற்றிலும் யுகலாகக் காண்பிக்கின்றனர். இவையனைத்தையும் புத்தியில் வைத்துக் கொள்ள வேண்டும். நாம் நடிகர்கள் என்று மனிதர்கள் கூறுவர். ஆக அவர்கள் நாடகத்தின் முதல், இடை, கடை பற்றி அறிந்திருக்க வேண்டுமல்லவா! உயர்ந்ததிலும் உயர்ந்த பகவான் யார்? பிரம்மா, விஷ்ணு, சங்கர் யார்? 8-10-100 கைகள் உடைய வேறு யாராவது இருக்கின்றார்களா? இல்லை. இவையனைத்து சித்திரங்களும் தவறானதாகும். பிரம்மா விற்கு 100 கைகளைக் காண்பிக்கின்றனர். இப்பொழுது இவர் பிரஜாபிதாவாக இருக்கின்றார். 100 கைகளுக்கான வேலையே கிடையாது. இவையனைத்தும் தவறான தாகும். உண்மையில் சரியானது எது? என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான், பரந்தாமத்தில் இருக்கக்கூடியவர், நட்சத்திரத்தைப் போன்று இருக்கின்றார். விஷ்ணுவிற்கும் 4 கைகள் காண்பிக் கின்றனர் - இரண்டு கைகள் லெட்சுமிக்கும், இரண்டு கைகள் நாராயணனுக்கும். இராவணனுக்கு 10 தலைகள் காண்பிக்கின்றனர், 5 விகாரங்கள் பெண்களிடத்தில், 5 விகாரம் ஆண்களிடத்தில். முதன் முதல் முக்கிய விகாரம் தேகாபிமானமாகும். பிறகு மற்ற விகாரங்களும் வரிசைக்கிரமமாக வருகின்றன. சூட்சும வதனவாசி பிரம்மா அவ்யக்தமாக இருக்கின்றார். பிரஜாபிதா பிரம்மா இங்கு தேவையல்லவா! இவர் சம்பூர்ணமாகும் பொழுது சூட்சுமவதனத்தில் பரிஸ்தாவாகி விடுகின்றார். நீங்களும் பரிஸ்தாவாகி விடுகின்றீர்கள். அங்கு உங்களது சரீரமானது எலும்பும், தோலுமானதாக இருக்காது. அ.து பரிஸ்தா என்று கூறப்படுகின்றது. பிரம்மா பிரஜாபிதா இங்கு இருக்கின்றார். பிறகு விஷ்ணு இரண்டு ரூபத்தில் பாலனை செய்வார். சங்கர் சூட்சும வதனத்தில் இருக்கின்றார். இது மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய விசயமாகும். இந்த அளவிற்கு தொலை நோக்கு புத்தியுடைய வர்கள் யாரும் கிடையாது. உங்களது புத்தி ஒரேயடியாக மூலவதனம், சூட்சுமவதனம் வரைக்கும் சென்று விடுகின்றது. சூட்சுமவதனம் இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கின்றது. பிரம்மா, விஷ்ணு, சங்கரும் படைப்பு ஏற்படும் பொழுதுதான் வந்து செல்ல முடியும். ஆக உயர்ந்ததிலும் உயர்ந்தவர் பகவான், பிறகு பிரம்மா, விஷ்ணு, சங்கர், பிறகு இந்த மனித உலகில் தேவி தேவதைகள். மற்றபடி 8-10 கைகள் உடைய அல்லது சண்டிகா தேவி போன்றவர்கள் கிடையாது. இவ்வளவு சித்திரங்கள் எங்கிருந்து வந்தன? உங்களிடத்தில் எந்த ஆயுதமும் கிடையாது. இவையனைத்தும் இம்சைக்கான ஆயுதங்களை அமர்ந்து உருவாக்கி இருக்கின்றனர். தேவதைகள் இரட்டை அகிம்சா தாரிகளாக இருப்பார்கள். சூட்சுமவதனத்தில் எந்த ஆயுதங்களும் கிடையாது. சித்திரங்களில் எவ்வளவு ஆயுதங்களை கொடுத்து விட்டனர். இதனையே பொம்மை பூஜை என்று கூறப்படுகின்றது. தொழிலை யாரும் அறிந்திருக்கவில்லை. பாபா வந்து பிரம்மாவின் மூலம் புது படைப்புகளை படைக்கின்றார் எனும் பொழுது சுயம் உயர்ந்தவர் ஆகிவிடுகின்றாரல்லவா! நீங்கள் அவரது குழந்தைகளாக பேரன், பேத்திகளாக இருக்கின்றீர்கள். புரிந்து கொள்பவர்கள் புரிந்து கொள்ளவும் செய்கின்றனர். இருப்பினும் அனைவருக்கும் இறப்பு ஏற்படும் என்பதைப் புரிந்து கொள்வதில்லை. இப்பொழுது

கோடிக்கணக்கில் இறந்து கொண்டிருக்கின்றனர். செய்திதாள் போன்றவைகளில் எதையும் காண்பிப்பதில்லை. இல்லை யெனில் பெயர் கெட்டுவிடும். பசியால் பலர் இறக்கின்றனர். ஒரு நேரத்தில் இரண்டு ரொட்டி கிடைப்பதே கடினமாகிவிடும். சத்யுகத்தில் லெட்சுமி நாராயணனின் இராஜ்யம் நடைபெறுவதை குழந்தைகளாகிய நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். இரண்டு கைகள் உடைய மனிதர்கள். மற்றபடி சத்யுகத்தில் 8-10 கைகள் உடைய தேவிகள் இருக்கமாட்டார்கள். இரண்டாவது நம்பரில் இருப்பவர்கள் இராமர், சீதை. அவர்களும் இங்கு இராஜயோகத்தின் மூலமாக பதவியை அடைந்து கொண்டிருக் கின்றனர். புரிந்து கொள்வதற்கு எவ்வளவு எளிமையான விசயமாக இருக்கின்றது! தந்தை கூறு கின்றார் - நீங்கள் அதிக வேத சாஸ்திரங்களை படித்திருக்கின்றீர்கள். இப்பொழுது நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். மேலும் நான் உண்மையைக் கூறுகின்றேனா? அல்லது அவர்கள் உண்மையைக் கூறுகின்றார்களா? என்பதை முடிவு செய்யுங்கள். ஒருவேளை அவர்கள் உண்மையை கூறுகின்றார்களெனில் சத்திய நாராயணனின் கதையின் மூலமாக நீங்கள் சத்திய நாராயணனாக ஏன் ஆகவில்லை?

இப்பொழுது நீங்கள் நடைமுறையில் சத்திய பாபாவிடமிருந்து சத்திய கதையைக் கேட்டுக் கொண்டிருக் கின்றீர்கள் - நாரியிலிருந்து லெட்சுமி, நரனிலிருந்து நாராயணன் ஆவதற்கான கதை இதுவாகும். பிரஜைகளும் இருப்பார்களா? அல்லது லெட்சுமி நாராயணன் சென்று சிம்மாசனத்தில் அமர்வார்களா? இங்கு தேவி தேவதைகளின் இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கின்றது. பிறகு சத்யுகத்தில் வந்து இராஜ்யம் செய்வார்கள். அங்கு ராஜாக்களுக்கு படைகளே இருக்காது. தூய்மை யற்ற விகாரி ராஜாக்களுக்குத் தான் படைகள் இருக்கும். அவர்கள் தூய்மையான ராஜாக்களாக இருப்பார்கள். சத்யுகத்தை தூய்மையான தேசம் என்று கூறப்படு கின்றது. இதனை தூய்மையற்ற தேசம் என்று கூறப்படுகின்றது. மிகவும் பழைய, தூய்மை இல்லாமல் ஆகி விட்டது. புதியது பழைய தாக ஆகியே தீர வேண்டும். சரீரமும் கூட முதலில் புதியதாக பிறகு பழையதாக ஆகிவிடுகின்றது. இது புத்தியில் அமர வேண்டுமல்லவா! மனிதர்களாக இருந்தும் நாடகத்தின் முதல், இடை, கடையை அறிந்திருக்கவில்லை. உயர்ந்ததிலும் உயர்ந்தவர் சிவபாபா, மூலவதனத்தில் இருக்கின்றார் என்பதை நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். அதனை நிராகார உலகம் என்றும் கூறப்படுகின்றது. பிந்து வடிவ ஆத்மாக்களும் அங்கு இருக்கின்றன. ஆனால் பிந்து ரூபம் மட்டும் கொடுத்தால் பிறர் எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்? பிந்துவிற்கு பூஜை எவ்வாறு செய்வார்கள்? சிவபாபாவிற்கு பிந்து ரூபத்தில் பூஜை எவ்வாறு செய்வார்கள்? திலகம் எவ்வாறு வைப்பார்கள்? பாபா அமர்நாத்திற்கும் சென்றிருக்கின்றார். எவ்வாறு சிவலிங்கத்தை உருவாக்கியிருக்கின்றனர் என்று முழுவதையும் பாபா பார்த்து வந்திருக் கின்றார். அங்கு பார்வதிக்கு சங்கர் கதை கூறியதாக கூறுகின்றனர். பார்வதி என்ன துர்கதி அடைந்தார்? அவருக்கு கதை சொல்ல வேண்டியிருக்கின்றது? உண்மையில் நீங்கள் அனைவரும் பார்வதிகளாக இருக்கின்றீர்கள். நீங்கள் பிறப்பு இறப்பில் வருகின்றீர்கள். மேலும் சத்கதி அடைவதற்காக கதையை கேட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். சிவலிங்கம் எங்கிருக்கின்றது? என்று அங்கு கேட்கப்பட்டது. அதற்கு சிவலிங்கம் தானாகவே உருவானது என்று கூறுகின்றனர். அட, இது எவ்வாறு ஏற்படும்? அங்கு புறாவையும் காண்பிக்கின்றனர். புறா ஒருபொழுதும் பேச கற்றுக்

கொள்வதில்லை. கிளிக்குப் பேச கற்றுக் கொடுக்கும் பொழுது அது பேசுகின்றது. மனப்பாடம் ஆகி விடுகின்றது. நீங்கள் ஞான மணிமாலை அணிகின்றீர்கள். ஆக பாபா புரிய வைத்திருக்கின்றார் - உயர்ந்ததிலும் உயர்ந்தவர் சிவபாபா, பிறகு பிரம்மா, விஷ்ணு, சங்கர். இல்லற மார்க்கத்தைக் காண்பிப்பதற்காக விஷ்ணுவிற்கு 4 கைகள் காண்பிக்கின்றனர். இங்கு மனித சிருஷ்டியில் உயர்ந்ததிலும் உயர்ந்தவர் லெட்சுமி நாராயணன், மேலும் அவரது இராஜ்யமாகும். பிறகு இராமர் சீதையின் இராஜ்யமாகும். இந்த தூய இராஜ்யம் முடிவடைந்த பிறகு இராவண இராஜ்யம் ஆரம்ப மாகின்றது. பிறகு அனைவரும் தூய்மை இழந்தே தீர வேண்டும். மற்றபடி பின் நாட்களில் வரக் கூடிய ஆத்மாக்களின் பிரபாவம் வெளிப்படு கின்றது. சிலருக்கு சதோபிர தானம் சிலருக்கு ரஜோ, தமோவிற்கான பாகம் இருக்கின்றது. இது எல்லையற்ற நாடகமாகும். மனிதர்கள் மனிதர்களாகவே இருக்கின்றனர். மற்ற அனைத்தும் பொம்மை பூஜைகளாகும். நீங்கள் நடிகர்கள் அல்லவா! இப்பொழுது நீங்கள் மனிதனிலிருந்து தேவதைகளாக ஆகிக் கொண்டிருக்கின்றீர்கள். படிப்பின் மூலமாக மனிதர்கள் எவ்வளவு உயர்ந்த பதவியை அடைகின்றனர். இதுவும் படிப்பாகும். இதன் மூலம் நீங்கள் இராஜ்ய பதவியை அடை கின்றீர்கள். இப்படிப்பட்ட படிப்பு வேறு எங்கும் கிடையாது. அந்த இளவரசர், இளவரசிகள் பலனை அடைந்து வருகின்றனர். நீங்கள் இங்கு பலனை உருவாக்கிக் கொண்டிருக்கின்றீர்கள். எதிர்கால சத்யுகத்திற்காக எவ்வளவு உயர்ந்த மற்றும் எளிய ஞானமாக இருக்கின்றது - விநாடியில் ஜீவன் முக்தியாகும். நாம் எல்லையற்ற தந்தையின் குழந்தைகளாக இருக்கின்றோம், ஈஸ்வரிய மடியில் அமர்ந்திருக்கின்றோம். ஈஸ்வரிய மடியை யாராவது விடுவார்களா?

ஆக இந்த நாடகத்தின் முதல், இடை, கடையைப் புரிந்து கொள்ள வேண்டும். தந்தை யதார்த்த முறையில் அமர்ந்து புரிய வைக்கின்றார். அவரையே மனித சிருஷ்டியின் விதை ரூபமானவர் என்று பாடப்பட்டிருக்கின்றது. சத், சித், ஆனந்தம் என்று கூறப்பட்டிருக்கின்றது. எப்பொழுது வருகின்றரோ அப்பொழுது கண்டிப்பாக ஆஸ்தி கொடுப்பாரல்லவா! நீங்கள் சத்திய கண்டத்திற்கு எஜமான் தேவி, தேவதைகளாக ஆகின்றீர்கள். பயப்படுவதற்கான எந்த விசயமும் கிடையாது. இங்கு எவ்வளவு பயம் இருக்கின்றது - யாரும் படையெடுத்து விடக் கூடாது. நீங்கள் முற்றிலும் பயமற்றவர்களாக இருக்க வேண்டும். சரீரத்தை யாராவது அடித்தாலும், ஆத்மாவை யாரும் அடிக்க முடியாது. ஆக பயப்படு வதற்கு என்ன இருக்கின்றது! பயமற்றவர்களாக இருப்பதற்கு அதிக அறிவு தேவை. தந்தையும் பயமற்றவர் எனில் குழந்தைகளும் பயமற்றவர்களாக இருக்க வேண்டும். தாக்குதல் என்பது சரீரத்திற்கு ஏற்படுகின்றது, நான் ஆத்மா, பாபாவிடத்தில் சென்று கொண்டிருக்கின்றேன், எனக்கு என்ன பயம் இருக்கின்றது! நாம் அமர்ந்திருக்கும் பொழுது கூரை விழுந்து விட்டால் நாம் பாபாவிடத்தில் சென்று விடுவோம். பயமற்றவர் களாக ஆவதற்கு காலதாமதம் ஏற்படுகின்றது. நீங்கள் ஜெகதம்பாவின் குழந்தைகள் சிவசக்தி சேனைகள். ஒருவருக்கான மகிமை கிடையாது. நீங்களும் கூடவே இருக்கின்றீர்கள். இவர் (சிவ பாபா) கமாண்டராக இருக்கின்றார். உங்களுக்கு ஆன்மீக டிரில் கற்றுக் கொடுக்கின்றார். நீங்கள் அவரது குழந்தைகளாக இருக்கின்றீர்கள். நீங்கள் அதிஷ்ட நட்சத்திரங்கள். இந்த சரஸ்வதியும் அதிஷ்ட நட்சத்திரமாக இருக்கின்றார். பிரம்மாவின் குழந்தையல்லவா! அந்த ஞான சூரியனுக்கு சந்திரனாக இவர் (பிரம்மா) இருக்கின்றாரல்லவா! ஆனால் இவர் ஆணாக

இருக்கின்ற காரணத்தினால் தாய்மார்களின் மீது கலசம் வைக்கப் பட்டிருக்கின்றது. நல்லது.

இனிமையிலும் இனிய செல்லமான, பிரம்மா வாய்வழி வம்ச பிராமண குல பூஷணர்கள், சுயதரிசன சக்கரதாரி குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் உள்ளப்பூர்வமான, ஆத்மார்த்தமான அன்பு நிறைந்த வரிசைப்படியான முயற்சியின் படி அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகத் தந்தைக்கு ஆன்மீகக் குழந்தைகளின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) கலியுக தமோபிரதான சம்ஸ்காரங்களை நீக்கி உண்மையான பிராமணன் ஆக வேண்டும். யாரிடத்திலும் பகைத்துக் கொள்ளக் கூடாது.

2) பயமற்றவர்களாக ஆவதற்கு ஆத்ம அபிமானியாக இருக்கும் பயிற்சி செய்ய வேண்டும். நாம் சிவசக்தி சேனைகளாக இருக்கின்றோம், நாம் சத்திய கண்டத்திற்கு எஜமானர்களாக ஆக வேண்டும் என்ற போதையில் இருக்க வேண்டும்.

வரதானம் : கலியுக வாயுமண்டலத்தில் இருந்தாலும் அதன் அதிர்வலைகளில் இருந்து பாதுகாப்பாக இருக்கக் கூடிய சுயராஜ்ய அதிகாரி ஆகுக.

யாரை எந்த ஒரு கர்மேந்திரியமும் தன் வசமாகக் கவர்ந்திழுக்காமல் இருக்கிறதோ, சதா ஒரு பாபாவின் பக்கம் கவரப்பட்டவராக இருக்கிறார்களோ, அவர்கள் தாம் சுயராஜ்ய அதிகாரி எனச் சொல்லப் படுவார்கள். எந்த ஒரு மனிதர் அல்லது பொருளின் பக்கம் கவரப்படக் கூடாது. அத்தகைய சுயராஜ்ய அதிகாரி தாம் தபஸ்வி ஆவார். அவர்கள் தாம் அன்னப்பறவை - கொக்குகளின் வாயு மண்டலத்தில் இருந்தாலும் சதா பாதுகாப்பாக இருப்பார்கள். ஒரு சிறிதும் உலகத்தின் அதிர்வலைகள் (வைப்ரேஷன்) அவர்களைக் கவர்ந்திழுக்காது.. அனைத்துப் புகார்களும் முடிந்து போகும்.

சுலோகன்: தீயவற்றை நல்லவையாக மாற்றி விடுவது தான் உயர்ந்த பிராமணர்களின் உயர்ந்த சக்தியாகும்.